# உண்மை இஸ்லாத்தை பின்பற்றி சுவனம் நுழைய விரும்பும் உள்ளங்களே!

இஸ்லாம் ஒரு தூய்மையான மார்க்கம். இது அல்லாஹ்வினால் அகிலத்தார் அனைவருக்கும் இறக்கி வைக்கப்பட்டதாகும். அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமும் இஸ்லாமாகும். (அல்குர்ஆன் 3 : 19 ) இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் முஸ்லிம்களாவர்.

இஸ்லாம் என்பதன் பொருள் கட்டுப்பாடாகும். முஸ்லிம் என்பவர் கட்டுப்பட்டு நடப்பவராவார். எனவேதான் அல்குர்ஆனில், அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் உங்களில் உள்ள அதிபருக்கும் கட்டுப்படுங்கள் என்று ஏவியுள்ளான் ( 4 : 59 ). எனவே கட்டுப்பாடு இன்றி இஸ்லாம் இல்லை.

இந்த தூய இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் **“மூன்று பேர்களாகி விட்டால், தங்களுக்குள் ஒருவரை அமீராக தேர்ந்தெடுத்து, அவருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அதுவே இஸ்லாமிய தலைமைத்துவமாகும். அத்தலைமைத்துவம் இல்லாது, ஒருவர் வாழ்ந்து மரணித்தால் அவர் ஜாஹிலிய்ய மரணத்தை தழுவுவார்”** என்று இஸ்லாம் கூறுகின்றது.

அப்படிப்பட்ட தலைமைத்துவம் நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலும் அவர்களுக்குப் பின் தோன்றிய 12 கலீபாக்களின் காலத்திலும் காணப்பட்டது. இத்தகைய இஸ்லாமிய தலைமைத்துவத்தில் ஒருவர் வந்து இஸ்லாத்தை விளங்கி, அதனை ஏற்றுக்கொண்டு “பைஅத்” செய்து நுழைவதன் மூலம்தான் முஸ்லிமாகின்றார். அதனை ஏற்று பின்னர் அதிலிருந்து ஒருவர் விலகிச் சென்றால், அவர் இஸ்லாமிய வளையத்தை தன கழுத்திலிருந்து களைந்து விட்டார்” என்று இஸ்லாம் கூறுகின்றது.

“இப்படியான இஸ்லாமிய தலைத்துவம் ஒரு காலத்தில் பிரிந்து சிதறிவிடும்” என்றும், “அக்காலத்தில் வாழ்பவர்கள் இஸ்லாமிய தலைமத்துவ

வழிநடாத்தல் இல்லாத பிரிவுகளில் சிக்காது ஒரே தலைமைத்துவத்தைக் கொண்ட ஜமாஅதுல் முசஸ்லிமீனுடன் இணையவேண்டும்" என்று இஸ்லாம் மிகத் தெளிவாகக் கட்டளையிடுகின்றது.

அத்தகைய இஸ்லாமிய தலைமைத்துவத்தைக் கொண்ட ஜமாஅதுல் முஸ்லிமீனில் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு வழிநடாத்தக் கண்ட ஒருவர், அதில் இணைந்து அதன் தலைவருக்குக் கட்டுப்பட்டு நடக்காது, பிரிவுகளில் சேர்ந்திருந்து அதே நிலையில் மரணித்தால், அவர் நரகம் புகுவார் என்றும் இஸ்லாம் கூறுகின்றது.

இக்கண்ணோட்டத்தில் நீண்டகாலமாக இஸ்லாமிய தலைமைத்துவமில்லாது இருந்த வேலையில், அல்லாஹ்வின் உதவியால் மீண்டும் அது பாகிஸ்தானில் உருவாகி மக்களை தூய இஸ்லாத்தின்பால் அழைத்துக் கொண்டிருக்கிறது.

பிரிவு காலத்தில் ஒருவர் வாழ நேரிட்டால், "அனைத்துப் பிரிவுகளையும் விடுத்து ஒதுங்கி, ஜமாதுல் முஸ்லிமீனையும் அதன் தலைவரையும் பிடித்துக்கொள்" என்ற இறைத்தூதரின் கட்டளை புகாரி, முஸ்லிமில் காணப்படுவதனால், நாங்களும் அந்த இஸ்லாமிய தலைமைத்துவத்துடன் இணைந்து அதன் கிளையாக இலங்கையில் இயங்கி வருகின்றோம்.

ஷிர்க், பித்அத், குப்ர், ஜாஹிலிய்யத் எதுவுமே கலக்காத, அல்குர்ஆன், அல் ஹதீஸை மட்டும் கொண்டு வழிநடாத்தும் ஒரு தூயமையான அமைப்பைக் கண்ட பலர் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் எமது கிராமமாகிய ஏத்தாலை வந்து இந்த சத்தியத்தோடு இணைந்து இங்கேயே வாழ்ந்தும் வருகின்றனர். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஓதி, பட்டம் பெற்ற சுமார் உலமாக்களும் இதில் இணைந்துள்ளனர்.

எனவே, இந்தக் கொள்கை பிரசுரம் கிடைக்கும் ஒவ்வொருவரும் இந்த சத்தியத்தில் இணைந்து நபியவர்களின் வாக்குப் பிரகாரம் சுவனம் நுழைவதற்காக வேண்டி இந்த சத்தியத்தை நோக்கி அணிதிரளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். இந்த உண்மையான, தூய இஸ்லாத்தின் அஸ்திவாரமும், அதன் கொள்கைக் கோட்பாடுகளும் உறுதியானதும் பலமானதுமாகும். அவை

அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். அதன் சுருக்கம் பின்வருமாறு:

1. **ஈமான்** :

அல்லாஹ்வையும் அவனது மலகுமார்களையும், அவனது வேதத்தையும், அவனது சந்திப்பையும், அவனது தூதர்களையும், நம்பிக்கை கொள்வதும், இன்னும் மறுமையில் எழுப்பப்படுவதையும் நன்மை தீமை யாவும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன என்றும் நம்புவதுமாகும்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 97 )

2. **இஸ்லாம்** :

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட வேண்டும். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கக் கூடாது. விதிக்கப்பட்ட தொழுகையை நிலைநாட்டுவதும் கடமையாக்கப்பட்ட ஸகாத்தை வழங்குவதும் ரமழானில் நோன்பு நோற்பதும், ஹஜ் செய்வதுமாகும்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 97 )

3. இருதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களாவார்கள். அவர்களுக்குப் பின் நபி இல்லை. அவர்கள் நபிமார்களுக்கேல்லாம் முத்திரையானவார்கள்.
( அல்குர்ஆன் : 33 : 40 )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “எனக்குப் பின் நபி இல்லை”.

( ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், திர்மிதி )

4. நபித் தோழர்கள் அனைவரும் சுவனவாசிகள். அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டார்கள்.

( அல்குர்ஆன் : 98 : 8 )

5. இஸ்லாத்தின் மூலாதாரங்கள் இரண்டு மாத்திரமே.

ஒன்று அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் (ஸுன்னா) வாழ்க்கை வழிமுறையுமாகும் மார்க்க சட்டதிட்டங்கள் இவ்விரண்டிலிருந்து மட்டுமே எடுக்கப்பட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நான் உங்களுக்கு மத்தியில் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறமாட்டீர்கள்.

( அல்ஹாகிம் )

6. வானத்திலிருந்து அல்லாஹ் இறக்கி வைத்ததைத் தவிர வேறெதையும் ஒரு முஸ்லிம் பின்பற்றக்கூடாது.

( அல்குர்ஆன் : 7 : 3 )

எனவே மத்ஹபுகள், இயக்கங்கள், மார்க்கமல்ல.

7. "அல்லாஹ்வும் படைப்புகளும் ஒன்று" என்ற கொள்கையும், "முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பின் ஒரு நபி வருவார்" என்ற கொள்கையும், "குர்ஆன் மட்டும் போதும் ஹதீஸ் மார்க்கமல்ல" என்ற கொள்கையும் தெளிவான "குப்ர்" – நிராகரிப்பாகும்.
8. அல்லாஹ் தனக்கு இணை (ஷிர்க்) வைப்பதை மன்னிக்கமாட்டான். அவர்களுக்கு சுவர்கம் ஹராமாக்கப்ப்டு அவர்கள் நிரந்தர நரகையடைவார்கள். (4 : 116 , 5 : 72 ) ஷிர்க் என்பது சூனியம், சாஸ்திரம், அல்லா அல்லாதவர்களுக்கு அறுத்துப் பலியிடுதல், அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்தல், தொழுகையை விடுதல் போன்ற விடயங்களைக் குறிக்கும்.

9. தூய இம்மார்கம் அல்லாஹ்வுக்குரியது. ( அல்குர்ஆன் : 98 : 8 )

இம்மார்க்கத்தில் ஒரு விடயத்தைக் கூட்டி "பித்அத்"தை ஏற்படுத்துவது இணைவப்பதாகும். அவர்களுக்கு "ஹவ்லுல் கவ்தர்" என்ற ஆற்றில நீர் புகட்டப்படமாட்டாது.

( அல்ஹாகிம் )

10. இணை அல்லாத ஏனைய பாவங்களில் ஈடுபடுபவர்கள் தௌபா செய்யாது மரணித்தால் அவர்களில் அல்லாஹ் தான் நாடியவர்களை மன்னிப்பான். ( அல்குர்ஆன் : 4 : 48 )

11. ஒரு முஸ்லிமைப் பார்த்து தக்க காரணமின்றி “காபிர்”, “நிராகரிப்பவன்” என்றோ அல்லது “அல்லாஹ்வின் விரோதி” என்றோ கூறக்கூடாது. ஏனெனில், அது அவரிடம் காணப்படாவிட்டால் அது சொன்னவரை நோக்கி திரும்பி விடும்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 212 )

12. அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பு வழங்க வேண்டும் இல்லாவிடின், அவன் நிராகரிப்பவனாகிவிடுவேன்.

(அல்குர்ஆன் : 5 : 44 )

13. முஸ்லிம்கள் பிரிந்து விடாது ஒரே கூட்டமாக இருக்க வேண்டும்.

( அல்குர்ஆன் : 3 : 103 )

14. மார்க்கத்தை பலவாறு பிரித்து பல பிரிவுகளாக மாற்றுவது அல்லாஹ்வுக்கு **இணைவைப்பதாகும்**.

( அல்குர்ஆன் : 30 : 31 , 32 )

15. இஸ்லாமிய உம்மத் ஒரு காலத்தில் 73 ஆகப பிரியும் என்றும் அதில் 72 நரகமும் ஒரு கூட்டம் சுவனமும் என்றும் அது ஜமாஅத்தாகும் எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

( அபூதாவூத் )

16. பிரிவு காலத்தில் எல்லாப் பிரிவுகளையும் விட்டுப் பிரிந்து அல்ஜமாஅத்தாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து கொள்ள வேண்டும்.

( ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா )

17. அலாஹ்றவுக்குரிய சிபத்துகளை விசுவாசிப்பதோடு, அவைகளுக்கு மாற்று விளக்கங்கள் கொடுத்து திரிபுபடுத்தாது, வந்த பிரகாரம் நம்புவதோடு இதன் விளக்கத்தை அல்லாஹ் மட்டுமே அறிவான் என்றும் நம்ப வேண்டும்.

( அல்குர்அன் : 3 : 7 )

18. சத்திய இஸ்லாத்திற்கு ஒரு தலைமைத்துவம் உண்டு. அத்தளைமைத்துவம் ஜமாஅதுல் முஸ்லிமீனின் தலைமைத்துவமாகும். அதன் தலைவரோடு இணைந்திருக்கும்படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். "அத்தலைவரோடு இணையாதிருந்து மரணிப்பது ஜாஹிலிய்ய மரணம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் ஹாகிமில் காணப்படுகின்றது.

"ஜமாஅதுல் முஸ்லிமீனையும் அதன் தலைவரையும் பற்றிக் கொள்."

( ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

"யார் இமாம் இஅல்லாது மரணிக்கின்றாரோ, அவர் ஜாஹிலிய்ய மரணத்தை அடைவார்."

( அல்ஹாகிம் )

19. மூன்று பேர்கள் கிராமத்திலோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால் அவர்களுக்கு ஒரு தலைவரை நியமித்துக் கொள்ளவேண்டும்.

( அபூதாவூத், அஹ்மத் )

20. மேற்கூறப்பட்ட சட்டதிட்டங்களைக் கொண்டு வழி நடாத்தும் ஜமாஅதுல் முஸ்லிமீனின் தலைவருக்கு பைஅத செய்து அவருக்குக் கட்டுப்பட வேண்டும்.

"எவருடைய கழுத்தில் பைஅத இல்லாத நிலையில் மரணிக்கின்றாரோ, அவர் ஜாஹிலிய்ய மரணத்தையே தழுவுவார்."

( ஸஹீஹ் முஸ்லிம் )

அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு வழி நடாத்தும் காலமெல்லாம் அவருக்கு (அமீருக்கு) செவிமடுத்துக் கட்டுப்படுங்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

எனவே மேற்கூறப்பட்ட அமைப்பில் பாகிஸ்தான், கராச்சியில் இயங்கிக் கொண்டிருக்கும் தலைமைத்துவத்தின் கிளையாக இலங்கையில், ஏத்தாலை என்ற கிராமத்தை தலைமைத்துவமாகக் கொண்டு ஜமாஅதுல் முஸ்லிமீன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிரிவு காலத்தில் அனைத்துப் பிரிவுகளையும் விட்டு ஒதுங்குவதுடன் ஜமாஅதுல் முஸ்லிமீன் இருந்தால் அதில் இணைந்து கொள்ளும்படி நபி (ஸல்) அவர்களால் கட்டளையிடப்பட்டுள்ளதால், பிரிவுகளிலிருந்து நீங்கி, "இஸ்லாம் என்றால் அதன் கூட்டமைப்பு எப்படி இருக்கும்?" "குர்ஆன், ஹதீஸ் ஒளியில் அதன் வழிநடாத்தல் எப்படி இருக்கும்?" "இஸ்லாமிய சமூகம் எது?" என்பவைகளை நீங்கள் தெரிந்து உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பற்றிக் கொள்வதற்காக ஜமாஅதுல் முஸ்லிமீனை நோக்கி உங்களை அழைக்கின்றோம்.

பிரிவுகாலத்தில் இஸ்லாத்தின் பெயரால் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்துப் பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி, ஜமாஅதுல் முஸ்லிமீனுடனுன் அதன் தலைவருடனும் சேர்ந்திருக்குமாறு நபி (ஸல்) அவர்களால் கட்டளையிடப்பட்டது சம்பந்தமாக வந்திருக்கும் ஹதீஸ் பின்வருமாறு :

ஹுதைபதுப்னுல் யமானி (ரலி) என்ற நபித்தோழர் கூறுகின்றார்கள் :

மக்கள் அல்லாஹ்வின் தூதரிடத்தில் நன்மையைப் பற்றிக் கேட்டுகொண்டிருந்தார்கள்; நானோ தீமையைச் செய்ய நேர்ந்து விடுமோ எனப் பயந்து அவர்களிடம் தீயவை பற்றி கேட்டுகொண்டிருன்தேன். "நாம் அறியாமையிலும் தீமையிலும் வாழ்ந்து கொண்டிருந்தோம்; அப்படி இருக்கும்போது அல்லாஹ் எமக்கு இந்த நன்மையை (இஸ்லாத்தை) அருளினான். இந்த நமையின் பின்னால் ஏதேனும் தீமை ஏற்படுமா? எனக்கேட்டேன். அதற்கவர்கள் "ஆம்" எனக் கூறினார்கள். "அந்த கெடுதியின் பின்னால் நன்மை ஏற்படுமா?" எனக் கேட்டேன். அதற்கவர்கள் "ஆம் (ஆனால்) அதிலே சில மாற்றங்கள் காணப்படும்" எனக்கூறினார்கள். "அந்த மாற்றங்கள் என்ன?" என நான் கேட்க, "எனது நேர்வழியைப் பின்பற்றுவார்கள்; எனது

சுன்னதுகளை விட்டு விட்டு மக்களை வழிநடாத்துவார்கள்; அவர்களிடம் நல்லவைகளைக் காணுகின்ற அதே நேரம் தீயவைகளையும் காண்பாய்" எனக் கூறினார்கள். "அந்த நன்மையின் பின்னால் (மீண்டும்) ஏதேனும் தீமை வருமா?" என நான் கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதரவர்கள் "ஆம், (அந்த காலத்திலே) நரகத்தின் வாசலில் நின்று கொண்டு சில அழைப்பாளர்கள் அழைப்பார்கள்; யார் அவர்களுடைய அழைப்பை ஏற்று, அதன்பால் செல்கின்றார்களோ அவர்களை அதிலே (நரகத்திலே) தூக்கி எறிந்து விடுவார்கள்" எனக் கூறினார்கள். "(அவர்கள்) எப்படியானவர்கள் என சிறிது வர்ணியுங்கள் அல்லாஹ்வின் தூதரே!" என நான் கேட்க "அவர்கள் எங்களிலிருந்து தோன்றுவார்கள்: நாம் கூறுவது போன்றே கூறுவார்கள்" எனக் கூறினார்கள். "அந்தக் காலத்திலே நான் வாழ நேரிட்டால் நான் என்ன செய்ய வேண்டுமென என்னைப் பணிக்கின்றீர்கள்" என நான் கேட்க, "(எல்லா இயக்கங்களையும் விட்டு விலகி) ஜமாதுள் முஸ்லிமீனுடன் அதனது தலைவருடனும் சேர்ந்து கொள்வீராக!" எனக் கூறினார்கள். "அவர்களுக்கு ஜமாஅத்தோ, தலைவரோ இல்லையென்றால்........?" என நான் கேட்க, "அந்த நிலையிலும் எல்லாப் பிரிவுகளையும் விட்டும் ஒதுங்கி விடுவீராக!; இதன் காரணமாக நீர் (இஸ்லாத்தைப் பின்பற்றியவராக) மரணிக்கும் வரைக்கும் ஒரு மரத்தடியைத்தான் பிடித்துக் கொண்டு வாழ வேண்டியதோர் நிலை ஏற்பட்டாலும் சரியே" எனக் கூறினார்கள்.

(ஸஹீஹ் புஹாரி – கிதாபுல் பிதன்)

(ஸஹீஹ் முஸ்லிம் - கிதாபுல் இமாரா)

மேற்கூரபட்ட ஹதீஸின் அடிப்படையில் பிரிவுகள் காணப்படும் காலத்தில் ஒருவர் ஜமாஅதுல் முஸ்லிமீனுடன் இணைவதன் மூலம் மாத்திரமே சுவனம் நுழைய முடியும் என்பதனை நபி (ஸல்) அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். பிரிவுகளில் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏன் நபியவர்கள் வழங்கவில்லை என்றால், பிரிவுகளில் இணைந்திருப்பது "ஷிர்க்"காகும் என்பதனால்தான். இதனையே அல்லாஹ்வும் அல்குர்ஆனில் 30 : 31, 32 இல் தெளிவுபடுத்துகின்றான்.

இதனடிப்படையில் தன்னை நரகத்திலிருந்து காப்பற்றிக் கொள்வதற்காக வேண்டி, ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து கொண்ட முஸ்லிம்கள் "எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?" என்பது அவர்களுக்கு தெளிவுபடுத்தப்படும். அவற்றுள் சில எடுத்துக்காட்டுகள் இங்கே விபரிக்கப்படுகின்றன.

01 தூக்கம், மறதி, மாதவிடாய், பைத்தியம் போன்ற நான்கு காரணங்கள் அல்லாது ஒருவர் தொழுகையை விட்டால், அவர் காபிராகி விடுவார் என்பதனைப் பயந்து தொழுகையைப் பேணித் தொழுது கொள்ளவேண்டும்.

02 ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து கொள்ள விரும்பும் ஒருவர் ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் பின்வருமாறு “பைஅத்” உறுதி மொழி எடுக்க வேண்டும்.

நான் அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் இணைவைக்க மாட்டேன். மானக்கேடான விடயங்களில் ஈடுபட மாட்டேன், திருடமாட்டேன், பஞ்சத்திற்கு பயந்து குழந்தைகளை கொள்ள மாட்டேன், யாரையும் படுதூறு கூறமாட்டேன், குர்ஆன், சுன்னாவிற்கு மாற்றமில்லாத விடயங்களில் அமீருக்கு முடியுமானவரை கட்டுப்பட்டு நடப்பேன்.

03 ஆண்கள் தாடியை முழுமையாக வளர்த்து மீசையை கத்தரிக வேண்டும்.

04 ஆண்கள் ஆடையை கரண்டைக்கு மேல் அணிய வேண்டும்.

05 பெண்கள் முகம், கை, கால் உட்பட அனைத்து அங்கங்களையும் மூடி மறைக்க வேண்டும்.

06 பெண்கள் எக்காரணம் கொண்டும் மஹ்ரமான துணையின்றி தொழில் ரீதியாகவோ, ஹஜ், உம்ரா போன்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காகக் கூட ( 8 கி. மீ மேற்பட்ட ) பிரயாணம் மேற்கொள்வது கூடாது.

07 சிகரட், பீடி, சுருட்டு, கஞ்சா, அபின், லேகியம், புகையிலை, புகையிலைத் தூள் போன்ற போதை வஸ்துக்கள் விற்பது, பாவிப்பது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

08 மார்க்க விடயங்களில் தங்களுக்கு மத்தியில் வீண் விவாதங்களில் ஈடுபதுவதை தவிர்ப்பதோடு மார்க்க விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களை உலமாக்களை அணுகி அதற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

09 நம்மையை ஏவி, தீமையை தடுப்பதில் ஒவ்வொரு முஸ்லிமும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

10 தங்கள் வீடுகளிலும் கடைகளிலும் தொலைகாட்சிப் பெட்டி பாவிப்பது, இசை கேட்பது போன்ற தீய செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதோடு, தங்கள் குடும்பத்தையும் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

11 நோய், நொடிகள் ஏற்படின் அதற்கான மருந்துகளை பாவிப்பதுடன், அல்லாஹ்விடம் மன்றாடி பிரார்த்திக்க வேண்டுமே தவிர, சூநியம, சாஸ்திரம், மை பார்த்தல், அவ்லியாக்களுக்கு அறுத்துப் பலியிடுதல், அவர்களுக்கு காணிக்கை செலுத்துதல், அவர்களை அழைத்துப் பிரார்த்தித்தல், அல்லாஹ் அல்லாதவைகளைக் கொண்டு சத்தியம் செய்தல் போன்ற தீய செயல்களில் ஈடு பட்டு தங்கள் அமல்களை அழித்து விடாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

12 நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாக்களான, நரைத்த முடிக்கு கறுப்பு தவிர்ந்த சாயமிடுதல், தலையை நடுவில் பிரித்து வாருதல் போன்ற அனைத்து ஸுன்னாக்களையும் பேணி வருதல்.

13 முஸ்லிம்களுக்கு மத்தியில் ஸலாத்தைப் பரப்ப வேண்டும். இரண்டு முஸ்லிம்களுக்கிடையில் ஒரு சுவர் அல்லது மரம் குறுக்கிட்டு மீண்டும் சந்தித்தாலும் ஸலாம் கூறிக்கொள்ள வேண்டும்.

14 அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவதை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

15 இரவில் ஆகக்குறைந்தது ஒரு ரகாஅத்தாவது வித்று தொழ வேண்டும். அதில் குனூத் ஓத வேண்டும்.

16 ஒருவரிடம் பத்து பவுன் தங்க நகை, அதற்கு மேற்பட்டால் அல்லது அதன பெறுமதிக்குரிய பணம் இருந்தால் நூற்றுக்கு இரண்டரை வீதம் ஸகாத்தை பைதுல்மாலுக்கு ஒப்படைக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏவிய விடயங்களை பேணி ஒழுகுவதுடன், தடுத்த விடயங்களை முற்றாக தவிர்ந்து நடந்து நரக நெருப்பிலிருந்து தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி, பிரிவுகளை விட்டும் ஒதுங்கி சுவனம் செல்லும் என நபியவர்களால் நன்மாராயம் கூறப்பட்ட ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து வெற்றி அடையுமாறு ஒவ்வொருவரையும் நாம் அன்பாய் அழைக்கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு** :

ஜமாஅதுல் முஸ்லிமீன்

மஸ்ஜிதுல் முஸ்லிமீன்,

கல்பிட்டி வீதி, ஏத்தாலை,

புத்தளம், இலங்கை.

தொ. பே. இல : 032 22 68818

Email : onfo@jamaathulmuslimeen.com

http//www.jamaathulmuslimeen.com